# கனவு உலகம்.. மாயத்தோற்றம்.. மன நல கோளாறு.. ஷாக் ட்ரீட்மெண்ட்.. யாருக்கு.. எப்போது.. எப்படி.. ஏன்? கண்டிப்பா படியுங்க..

Authored By தனலட்சுமி | Samayam Tamil | Updated: 5 Jan 2024, 11:01 pm

தீவிர பெரிய மனநல கோளாறு இருப்பவர்களுக்கு எலக்ட்ரோகான்வல்சிவ் தெரபி (ECT - Electroconvulsive therapy ) என்னும் ஷாக் ட்ரீட்மெண்ட் கொடுப்பதன் மூலம் அவர்களை...

## உங்களுக்கானவை


ராஜஸ்தானின் பெருமிதமாக, இந்தியாவின் மிகப்பெரிய கோட்டையாக நிற்கும்...


செமி ஆட்டோமேட்டிக் வாஷிங் மெஷின் மூலம் மலிவு விலையில் சுத்தம் ரூபாய் 6,9...


Superstar Rajinikanth: என் படத்துல யாருமே இப்படி வேலை...




கனவு உலகம்.. மாயத்தோற்றம்.. மன நல கோளாறு.. ஷாக் ட்ரீட்மெண்ட்.. யாருக்கு.. எப்போது.. எப்படி.. ஏன்? கண்டிப்பா படியுங்க..

மனச்சிதைவு நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மின் வலிப்பு சிகிச்சை எலக்ட்ரோகான்வல்சிவ் தெரபி (ECT - Electroconvulsive therapy ) என்னும் ஷாக் ட்ரீட்மெண்ட் கொடுப்பதையும் அவர்கள் அலறுவதையும் சினிமாக்களில் பார்த்திருப்போம். ஆனால் நிஜத்தில் இவை யாருக்கு கொடுக்கப்படுகிறது, எதனால் கொடுக்கப்படுகிறது, இதன்



மாரி செல்வராஜுடன் இணையும் ரஜினி.. 'தலைவர் 172' படத்தில் எதிர்பாராத...

Speak For India மேடை பேச்சாளருக்கான மாபெரும் தேடுதல் வேட்டை : உடனே...



டெய்பெர்ரி என்றால் என்ன? இதை சாப்பிடுவதால் கிடைக்கும் நன்மைகள் என்ன?




இன்றைய ராசி பலன் 08 ஜனவரி 2024 - Today Rasi Palan



கூந்தலுக்கு ஆயில் மசாஜ்.. இரவு செய்யலாமா.. தலைக்குளியல் முன்பு...

Xiaomi, Samsung, OnePlus, POCO, Realme, iQOO... அடுத்த 3 மாதங்களில் வெளியாக...



1 TB ஸ்டோரேஜ், 5,800 mAh பேட்டரி... 108 MP சாம்சங் சென்சார் கேமரா உடன்...



மக்களே 29 மாவட்டங்களில் செம மழை - சென்னைக்கு இன்று மழை எப்படி?

நன்மைகள் என்ன என்பது குறித்து விளக்குகிறார் மிதுன் பிரசாத், MBBS, M.D. (Psychiatry) ,SIMS Hospital.

## Electroconvulsive therapy (ECT) என்றால் என்ன?





Superstar Rajinikanth: என் படத்துல யாருமே இப்படி வேலை...


டபுள் ஜாக்பாட் தரும் போஸ்ட் ஆபீஸ் திட்டம்.. உடனே முதலீடு பண்ணுங்க!


சென்னைக்கு ஆரஞ்சு அலர்ட் - வானிலை ஆய்வு மையம் தகவல்!


குண்டக்க மண்டக்க கூட்டணி மீண்டும் இணைகிறதா ? பார்த்திபன் சொல்லி இருக்கு...

எலக்ட்ரோகான்வல்சிவ் தெரபி (ECT - Electroconvulsive therapy ) என்பது மூளை வழியாக இலேசான மின்சாரத்தை அனுப்பும் குறுகிய வலிப்புத்தாக்கத்தை ஏற்படுத்த மிக இலேசான மின்னோட்டத்தை பயன்படுத்தும் ஒரு செயல்முறையாகும். இதை ஷாக் ட்ரீட்மெண்ட் என்று சொன்னாலும் மின்சாரம் பாயும் அளவுக்கு இதில் ஷாக் ஏற்படாது.

கடுமையான மனநல பாதிப்புகளில் எதிர்ப்பு நிலைகள் மறைய வலுவான நேர்மறையான விளைவுகளை ஏற்படுத்த இந்த சிகிச்சை மேற்கொள்ளப்படுகிறது. இந்த சிகிச்சை முறையில் குறுகிய கால மயக்க மருந்து அளிக்கப்படுவதால் இந்த நிலையில் வலியை உணர மாட்டார்கள். தீவிரமான மனநிலை பாதிப்பு கொண்டவர்களை மீட்டெடுக்க செய்யப்ப்படும் பாதுகாப்பான சிகிச்சை முறை இது,

---

## தீவிர பெரிய மனநல கோளாறுகள் என்று எதை சொல்கிறோம்



மனச்சோர்வு (depression) கவலை ( anxiety) மன அழுத்தம் ( stress ) போன்றவை மன நல பாதிப்பு அவ்வளவே. இவையெல்லாம் பெரிய தீவிர மனநல கோளாறுகளுக்கு கீழ் வராது. ஏனெனில் பெரிய தீவிர மனநல கோளாறு.. மனச்சிதைவு என்பது schizophrenia ,Bipolar disorder போன்றவற்றை குறிக்கும். இந்த தீவிர மனநல கோளாறுகள் என்பது மூளையில் இருக்கும் வேதியியல்

இராசயன மாற்றங்களின் ஏற்றத்தாழ்வால் உருவாக கூடியவை. இதற்கும் மனநிலைக்கும் சம்பந்தமில்லை.

## தீவிர பெரிய மனநல கோளாறுகள் அறிகுறி எப்படி இருக்கும்?



இல்லாத ஒன்றை இருப்பது போன்ற கற்பனைத்திறன் கொண்டிருப்பார்கள்.

இவர்களை நெருக்கமாக ஒருவர் கண்காணிப்பது போன்ற எண்ணம் இருக்கும்.

இவர்கள் பொருளை ஒருவர் திருடபோவதாக கற்பனை செய்துகொள்வார்கள்

இன்னும் சிலருக்கு காதுக்குள்ளே ஒரு குரல் தெளிவாக கேட்கும். நாம் செல்லும் போது திடீரென்று யாரோ பெயர் சொல்லி அழைத்தாற்போன்று இருக்கும் திரும்பி பார்த்தால் யாருமே இருக்க மாட்டார்கள். இது எப்போதாவது நடக்கும். ஆனால் பெரியமனநல கோளாறு கொண்டுள்ள இவர்களுக்கு காதுக்குள் தெளிவான குரல் கேட்கும் அதை கேட்டு இவர்கள் பதில் சொல்வார்கள். சீரான உரையாடலாக இது நடக்கும். இது Hallucinations அதாவது மாயத்தோற்றம் என்று சொல்வோம்.

சிலருக்கு கண்களுக்கு முன்பு ஏதோ உருவம் இருப்பது போல் தெரியும் இது visionary hallucinations என்று சொல்லப்படும்.

சிலர் தனக்குள்ளே முணுமுணுத்துகொள்வார்கள். சிரித்துகொள்வார்கள்.இப்படி மனதுக்குள் ஒரு குரல் கேட்பதாகவும் அதை அவர்கள் செய்வதாகவும் சொல்வார்கள்.

இதில் மோசமான ஒன்று உள்ளிருக்கும் குரல் இனி இந்த வாழ்க்கை உங்களுக்கு வேண்டாம் தற்கொலை செய்வது தான் சிறந்த வழி என்று சொல்வது போல் கேட்டு அந்த எல்லைக்கும் சென்று விடுவார்கள். இந்நிலையில் தற்கொலைக்கு முயற்சிக்கும் போது பக்கத்தில் இருப்பவர்கள் பார்த்து மருத்துவரிடம் அழைத்து வரும் போது தான் இந்த பிரச்சனை குறித்து மற்றவர்கள் அறிவார்கள். இதை அருகில் இருப்பவர்கள் தெரியாமல் அல்லது உணராமல் இருக்கும் போது தான் தற்கொலை பலருக்கும் சாத்தியமாகிவிடுகிறது.

இந்த குரல் hallucinations என்பது மாயத்தோற்றம் இவை எல்லாமே மூளையில் வேதியியல் இராசயன ஏற்றத்தாழ்வால் உண்டாவது. ஆனால் யார் என்ன சொன்னாலும் அவர்கள் இந்த விஷயங்களைஉ றுதியாக நம்புவார்கள். அது கற்பனை அல்ல உண்மை என்றே நம்புவார்கள். இதற்கு காரணம் அவர்கள் மூளையில் டோபமைன் என்னும் ஹார்மோன் அளவுக்கு அதிகமாக சுரப்பது தான். இவர்களுக்கு மருந்துகள் கொடுத்து மூளையில் டோபமைன் அளவை சரி செய்துவிடலாம் என்றாலும் அவை இரத்தத்தில் ஊறி பிறகு மூளைக்கு சென்று

செயல்பட சில காலம் பொறுத்திருக்க வேண்டும். இந்நிலையில் தான் இவர்களுக்கு ஷாக் ட்ரீட்மெண்ட் என்னும் இந்த modified electroconvulsive therapy தேவைப்படுகிறது.

---

# Electroconvulsive therapy எப்போது தேவைப்படும்?



பெரிய மனநல கோளாறான இந்நிலையில் அவர்கள் மாயத்தோற்ற குரலின் பின்னே செல்லலாம். தற்காலிக வாழ்க்கையை மறந்துவிடலாம் என்னும் போதும், தற்கொலை செய்துகொள்ளும் அளவு தீவிர கோளாறில் இருக்கும் போது மாத்திரைகள் அளிப்பது உடனடியாக தீர்வு அளிக்காத நிலையில் இந்த Electroconvulsive therapy தேவைப்படும்.

இது நேரடியாக மூளைக்குள் செலுத்தும் போது உடனடியாக இராசயன வேதியியல் மாற்றங்கள் சீராகும். இந்த சிகிச்சையில் 7-10 நாட்களுக்குள் இவர்களை பெருமளவு மீட்டுவிடலாம். அதன் பிறகு அவர்களுக்கு எந்த குரலும் கேட்காமல் செய்துவிடலாம். உடனடியாக அவர்களை கனவுலகில் இருந்து நிஜ உலகுக்கு மீட்டு வர இந்த சிகிச்சை நிச்சயம் உதவும்.

---

## Electroconvulsive therapy பக்கவிளைவுகள் உண்டு செய்யுமா?



இந்த சிகிச்சை மிக பாதுகாப்பான சிகிச்சை என்பதால் பக்கவிளைவுகள் என்பதும் பெரியதாக இருக்காது.

இந்த சிகிச்சைக்கு பிறகு அதிகபட்ச பக்கவிளைவுகள் என்றால் தற்காலிகமாக ஒரு வார காலத்தில் நடந்த விஷயங்கள் மறந்துவிடலாம். சிலருக்கு நினைவாற்றல் அதிகரிக்கவும் செய்யலாம்.

உடம்பு வலி, குமட்டல் உணர்வு போன்ற மயக்கமருந்தினால் வரக்கூடிய தற்காலிக பக்கவிளைவுகள் இருக்கும். இவையும் ஆபத்தானவை அல்ல.

- இந்த சிகிச்சையினால் நாள்பட நரம்புகளோ உடலோ பாதிக்கப்படுவதுமில்லை.
- இந்த சிகிச்சை எல்லோருக்கும் செய்வது கிடையாது. தீவிரமான மனச்சிதைவில் இருப்பவர்களுக்கு அவர்கள் மேற்கொண்டு எந்தவித குழப்பத்தையும் ஏற்படுத்தாமல் தற்கொலை நிலைக்கு செல்லாமல் இருக்க உடனடி குணப்படுத்தும் சிகிச்சைக்கு இவை கொடுக்கப்படுகிறது.
- சிலருக்கு மருந்துகள் கொடுக்கும் போது போதுமான முன்னேற்றம் இல்லாத நிலையில் அவர்களுக்கு இந்த Electroconvulsive therapy சிகிச்சை தேவைப்படும்.

இந்த பெரிய மனநல கோளாறு பாதிப்பு கொண்டிருப்பவர்களின் நடத்தை பார்த்து அருகில் இருப்பவர்கள் தான் கண்டறியவே முடியும். அவர்கள் மருத்துவரிடம் அழைத்து வரும் போது மனநல மருத்துவரை பரிந்துரை செய்வார்கள். அதுவரை பிரச்சனையின் தீவிரத்தை பெரும்பாலும் அறிந்திருக்க மாட்டார்கள். அவரும் பல்வேறு பரிசோதனை சிகிச்சை முறைகளுக்கு பிறகே பெரிய மனநல கோளாறு மூளையில் உண்டாகும் பாதிப்பு என்பதை கண்டறிந்தும்.. பாதிக்கப்பட்டவரின் உடல் மன ஆரோக்கியம் ஏற்ப சிகிச்சை அளிப்பார்.

உடல் எடை குறைக்கிறதுல இருந்து,செம்மையான ரிலேஷன்ஷிப் டிப்ஸ் வரைக்கும், எல்லாம் ஒரே இடத்துல Samayam Tamil Lifestyle Tips WhatsApp Channel -ல இப்பவே ஃபாலோ பண்ணுங்க!

தனலட்சுமி கட்டுரையாளரை பற்றி

தனலட்சுமி டிஜிட்டல் கன்டென்ட் புரொடியூசர்
நான் தனலட்சுமி சுந்தர். ஊடகத்துறையில் 24 வருடங்கள் சோர்வில்லாத பயணம். லைஃப்ஸ்டைல் தொடர்பான கட்டுரைகள் எழுதி வருகிறேன். மருத்துவ நிபுணர்களின் பேட்டிகள், கட்டுரைகள் மக்களுக்கு எடுத்து செல்வதில் விருப்பம் அதிகம். ஆன்மிகம், அரசியல் செய்திகள், சினிமா...
Read More